

நாள் : 08.10.2023 ஞாயிற்றுக்கிழமை
காலை 9.00 மணி
இடம் : காந்தி நகர், ஐ.சி.எப்,
சென்னை – 38

Star Digital 044 - 43 55 48 47

மகிழ்வுடன் வரவேற்கும் **வே.வாசு** Ex.MC
வில்லிவாக்கம் கிழக்கு பகுதி கழக செயலாளர்

**வில்லிவாக்கம் கிழக்கு பகுதி தி.மு.க ▪ சென்னை கிழக்கு மாவட்டம்**

வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதி உட்பட்ட
96வது வார்டு காந்தி நகர் குடியிருப்பு
ரூபாய் 83.52 கோடி திட்ட மதிப்பீட்டில்
தமிழ்நாடு நகர்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்
500 குடியிருப்புகள் கட்டும் பணி
அடிக்கல் நாட்ட வருகை தரும்

கழக இளைஞர் அணி செயலாளர், மாண்புமிகு இளைஞர் நலன்
மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
**கழகத்தலைவரின் போர்வாள்**

**உதயநிதி ஸ்டாலின்**

அவர்களை வருக! வருக!! என வரவேற்கின்றோம்...

**பி.கே.சேகர்பாபு**
சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர்
மாண்புமிகு அமைச்சர் இந்து சமய அறநிலையத்துறை
(ம) சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்

**த.மோ.அன்பரசன்**
மாண்புமிகு தொழிலாளர் நலன்(ம) ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர்

**தயாநிதிமாறன்** எம்.பி
கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்
கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர்

மேயர் **பிரியாராஜன்**
பெருநகர சென்னை மாநகராட்சி

**அ.வெற்றிஅழகன்** எம்.எல்.ஏ
மாநில பொறியாளர் அணி இணைச்செயலாளர்

**ப.ரங்கநாதன்** மு.எம்.எல்.ஏ
த.செ.உ. – தலைவர் தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம்

**கூ.பீ.ஜெயின்** எம்.சி
வில்லிவாக்கம் மேற்கு பகுதி கழக செயலாளர்
8வது மண்டல குழு தலைவர்


மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் - ஈ.ஆர்.ஈஸ்வரன் எம்.எல்.ஏ. தலைமையில்

# திருச்செங்கோட்டில் மாபெரும் வேலைவாய்ப்பு முகாமில் பணி நியமன ஆணைகள்!

## அமைச்சர் மரு.மா.மதிவேந்தன் வழங்கினார்!

நாமக்கல், அக். 8-

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு கே.எஸ். ரங்கசாமி தொழில்நுட்ப கல்லூரியில், மத்திய மாநில அரசு துறைகள், கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு (07.10.2023) நடைபெற்ற மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் தேர்வானவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச. உமா, திருச்செங்கோடு ஜல்லிக்கட்டு பேரவை தலைவர் மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம். மதுரா செந்தில், திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் ஈ.ஆர்.ஈஸ்வரன் தலைமையில் வழங்கினார்கள்.

இம் முகாமில் 121 நிறுவனங்கள் மூலம் 213 நபர்களுக்கு பணி ஆணைகளை, வனத்துறை அமைச்சர் மா. மதிவேந்தன் வழங்கினார்.

முன்னதாக, இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு முழுவதும் இருந்து 120 தனியார் துறை வேலை வழங்கும் நிறுவனங்கள் கலந்து கொண்டு தங்களுக்கு தேவையான ஆட்களை தேர்வு செய்தனர். வேலைவாய்ப்பு முகாமில் 121 நிறுவனங்களை கொண்டு நடைபெற்ற மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் 1800க்கும் மேற்பட்ட நபர்கள் கலந்து கொண்டு, பல்வேறு நிறுவனங்களில் பணிபுரிய 213 நபர்கள் தேர்வாகியுள்ளனர்.

நிகழ்ச்சியில் வனத்துறை அமைச்சர் டாக்டர் மா. மதிவேந்தன் பேசும் போது தெரிவித்ததாவது:

தமிழ்நாடு பல பொருளாதார குறியீடுகளில் அகில இந்திய அளவில் முன்னணி மாநிலமாக விளங்கி வருகிறது. இந்நிலையை தக்க வைத்துக் கொள்ளவும், பெரும் அளவிலான முதலீடுகளை ஈர்ப்பதன் மூலம் தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கி அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதுடன், மாநிலத்தில் பரவலான வளர்ச்சியை உறுதி செய்திடவும் தமிழ்நாடு அரசின் தொழில் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

### உலக முதலீட்டார்கள் மாநாடு!

தமிழ்நாட்டில் தொழில் தொடங்க பாதுகாப்பாக சூழலை ஏற்படுத்தியதன் விளைவாக மாநிலங்களின் தரவரிசை பட்டியலில் வெகுவாக முன்னேறி வருகிறது.

2030ம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரம் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு வளர்ச்சி அடைந்திட தமிழ்நாடு முதலமைச்சர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

தமிழ்நாட்டில் இதிக அளவில் முதலீடுகள் ஈட்டிடும் வகையிலும், இளைஞர்களின் வேலைவாயப்பினை உறுதி செய்திடும் வகையிலும் வருகின்ற 2024 ஜனவரி மாதம் உலக முதலீட்டாளர்கள் மாநாடு மிக சிறப்பாக நடைபெறவள்ளது.

தொழில் துறையில் மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக தமிழ்நாடு தொழில் வழிகாட்டி முகமைக்கு விருது கிடைக்க பெற்றுள்ளது. மேலும் இளைஞர்களின் திறன்களை மேம்படுத்திட பயிற்சி அளிக்க நான் முதல்வன் திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது. சிறுகுறு தொழில் தொடங்கிட மானியம் உள்ளிட்ட பல்வேறு சலுகைகளை வழங்கி ஊக்குவித்து வருகின்றார். இவ்வறாக தமிழ்நாடு அரசின் பல்வேறு வாய்ப்புகளை இளைஞர்கள் பயன்படுத்தி கொண்டு தங்களது வாழ்வதாரத்தை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். இளைஞர் எந்த துறையை தேர்வு செய்தாலும் முழு ஈடுபாட்டுடன் பணியாற்றி அத்துறையில் வெற்றி பெற தொடர்ந்து முயற்சிக்க வேண்டும்.


தமிழ்நாடு இளைஞர்களின் வேலைவாய்ப்பினை உறுதி செய்திடும் வகையில் தனியார் வேலை வாய்ப்பு முகாம்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. மேலும், இளைஞர்கள் இது போன்று நடைபெறும் வேலைவாய்ப்பு முகாமினை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன் என வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் தெரிவித்தார்.

தொடர்ந்து, மகளிர் திட்டம் சார்பில் 37 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.3.62 கோடி மதிப்பிலான வங்கி கடனுதவிகளை வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் திருச்செங்கோடு ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் சுஜாதா தங்கவேல், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) பிரியா, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் மா. ஷீலா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



கடலியல் வரலாற்று ஆய்வாளர் மறைந்த ஒரிசா பாலு அவர்களின் உடலுக்கு குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். அருகில் ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம் உள்ளார்.

**கருத்துக் களம்**
வழங்கும்
"தமிழ் கேள்வி" செந்தில் வேல் எழுதிய
**"நான் ஏன் பா.ஜ.க-வை எதிர்க்கிறேன்"**
நூல் அறிமுக விழா மற்றும் கருத்தரங்கம்
நாள் : 08.10.2023, ஞாயிற்றுக்கிழமை நேரம் : மாலை 5.00 மணி
இடம் : ரூபி பார்டி ஹால் பாரத மாதா தெரு, கிழக்கு தாம்பரம், சென்னை – 600 059.

தலைமை
முனைவர் **பா.கோபாலகிருஷ்ணன்**
மாநில தலைவர், கருத்துக் களம்

முன்னிலை
வழக்கறிஞர் **E.நட்ராஜ்** BA,BL.,
காஞ்சி வடக்கு மாவட்ட தி.மு.க
வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர்

வரவேற்புரை
**குறிஞ்சி சிவா**
காஞ்சி வடக்கு மாவட்ட தி.மு.க தொண்டரணி
மு.அமைப்பாளர்

நூல் அறிமுகம் – சிறப்புரை
வணக்கத்திற்குரிய மேயர்
**வசந்தகுமாரி கமலக்கண்ணன்** B.Tech.,
தாம்பரம் மாநகராட்சி / மாநகர தி.மு.க துணை செயலாளர்

கருத்தரங்கம்
பா.ஜ.க வின் பாசிசம் என்ற தலைப்பில்
தமிழ் கேள்வி **தி.செந்தில்வேல்**

தி.மு.க. வை ஆதரிப்பது ஏன் ? என்ற தலைப்பில்
**ஆதிமாறன்**
தலைமை செயற்குழு உறுப்பினர், தி.மு.க

நூலினை பெறும் சிறப்பு விருந்தினர்கள்
தாம்பரம் எம்.யாக்கூப் MC – மாநில துணைப் பொதுச் செயலாளர் மனித நேய மக்கள் கட்சி
பொன்.சதாசிவம் – தாம்பரம் மாநகர து.செயலாளர் தி.மு.க
டாக்டர் கிருத்திகாதேவி MD – காஞ்சி வடக்கு மாவட்ட தி.மு.க. மருத்துவ அணி தலைவர்
தாம்பரம் நாராயணன் – மாவட்ட அமைப்பாளர் தி.மு.க அமைப்பு சாரா ஓட்டுநர் அணி
ஜே.பி விஜய் ஆனந்த் – தாம்பரம் நகர காங்கிரஸ் தலைவர்
ப.சாமுவேல் எபிநேசர் – தாம்பரம் மாநகர (தெ) மாவட்ட செயலாளர் வி.சி.க
பா.முத்தையன் – தாம்பரம் மாவட்ட தலைவர், தி.க
துரை.மணிவண்ணன் – தாம்பரம் பகுதி கழக செயலாளர் ம.தி.மு.க
R.B.கோவிந்தன் – தாம்பரம் பகுதி கழக உறுப்பினர் மார்க்சிஸ்ட் கம்யூ கட்சி
தாமரை செந்தில்குமார் – இந்திய கம்யூனிஸ்ட் / "எதிர்பிம்பம் யூடியூப் சேனல்"
மா.இராமமூர்த்தி BE., – மாவட்ட தி.மு.க அயலக அணி து.அமைப்பாளர்
N.ஷாஜகான் – மாவட்ட தி.மு.க சிறுபான்மையினர் நலப்பிரிவு து.தலைவர்
M.கல்யாணி – மாவட்ட தி.மு.க மகளிர் தொண்டரணி து.அமைப்பாளர்

நன்றியுரை : **விக்கி (எ) விக்னேஷ்வரன்**
காஞ்சி வடக்கு மாவட்ட தி.மு.க மாணவர் அணி துணை அமைப்பாளர்

அனைவரும் வருக! வருக !! நிகழ்ச்சியை நேரலையில் காண YouTube Adhi Maran Talks Adhi Maran